## 2026 - 27 கல்வியாண்டில் 4 கோடியே 11 லட்சம்

# பாடநூல்கள் - பள்ளி திறக்கும் முதல் நாளிலேயே வழங்க திட்டம்!

## பள்ளி கல்வித்துறை தகவல்!

சென்னை, ஏப்.27- "2026 - 27 கல்வியாண்டில் 4 கோடியே 11 லட்சம் பாடநூல்கள் தயார் நிலையில் உள்ளதாகவும், பள்ளி திறக்கும் முதல்நாளிலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பள்ளி கல்வித்துறை தெரிவித்துள்ளது.

பள்ளி கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் 2026 27ஆம் கல்வியாண்டிற்கான பாடநூல் விநியோகப் பணிகளைப் முடுக்கி விடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 4 கோடியே11 லட்சம் பாடநூல்கள் அச்சிடப்பட்டு, பள்ளிகள் திறக்கும் முதல் நாளிலேயே மாணவர்களுக்குக் கிடைக்கும் வகையில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகவும், தமிழ்நாடு முழுவதும் 44 ஆயிரம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 70 லட்சம் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதுவரை 88 சதவீத புத்தக தயாரிப்புப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது மாவட்ட அளவிலான கிடங்குகளுக்குப் புத்தகங்கள் அனுப்பப்பட்டு, அங்கிருந்து பள்ளிகளுக்கு விநியோகிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், 4 முதல் 12ஆம் வகுப்புகளுக்கான புத்தகங்கள் ஏற்கனவே மாவட்டக் கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று முதல் 3ஆம் வகுப்புகளுக்கு இந்த ஆண்டு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதால், புத்தகங்கள் இறுதிக்கட்டத் தயாரிப்பில் உள்ளதாகவும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பாடநூல்களும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், தனியார் பள்ளி மாணவர்களும் இந்தப் புத்தகங்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் பள்ளி கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன காஸ் தட்டுப்பாடு எதிரொலி:

# சென்னையில் அணிவகுத்து நிற்கும் ஆட்டோக்கள் - 3 மணி நேரம் காத்திருக்கும் அவலம்!

## வாழ்வாதாரத்தை இழந்து தவிப்பதாக ஓட்டுநர்கள் குமுறல்!

சென்னை, ஏப்.27- வாகன காஸ் தட்டுப்பாடு காரணமாக சென்னையில் பங்குகளில் ஆட்டோக்கள் மூன்று மணி நேரத்திற்கு மேலாக வரிசைக்கட்டி நிற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. வாழ்வாதாரம் இன்றி தவிப்பதாக ஓட்டுநர்கள் தங்களின் குமுறலை தெரிவித்துள்ளனர். தமிழகத்தில், குறிப்பாக சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக எல்.பி.ஜி ஆட்டோ எரிவாயு தட்டுப்பாடு பெரும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. பெட்ரோல், டீசல் விலையேற்றத்தால் மாற்று எரிபொருளான எல்.பி.ஜிக்கு மாறிய ஆயிரக்கணக்கான ஆட்டோ ஓட்டுநர்கள், தற்போது எரிவாயு கிடைக்காமல் வீதிகளில் வரிசை கட்டி நிற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையின் முக்கியப் பகுதிகளான கிண்டி, வடபழனி, ஆவடி, மற்றும் பூந்தமல்லி போன்ற இடங்களில் உள்ள எரிவாயு விற்பனை நிலையங்களில் அதிகாலை 3 மணி முதலே ஆட்டோக்கள் வரிசையில் நிற்கத் தொடங்குகின்றன.

சில இடங்களில் இந்த வரிசை ஒரு கிலோமீட்டர் தூரத்தைத் தாண்டிச் செல்கிறது. ஒருமுறை டேங்க் நிரப்புவதற்கு ஓட்டுநர்கள் 3 முதல் 5 மணி நேரம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் அவர்களின் உழைக்கும் நேரம் வீணாகி, சவாரிகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலை மாற்றம் மற்றும் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் ஒருபுறம் இருந்தாலும், விநியோகச் சங்கிலியில் உள்ள குளறுபடிகளே இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

பல தனியார் எரிவாயு நிலையங்கள் 'ஸ்டாக் இல்லை' என்ற பலகையைத் தொங்கவிட்டுள்ளதால், அரசு எரிவாயு நிலையங்களில் கட்டுக்கடங்காத கூட்டம் கூடுகிறது.

இந்த தட்டுபாடு குறித்து ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியதாவது:

3 மணி நேரத்திற்கு மேலாக கேஸ் போடுவதற்காக காத்திருக்கிறோம். கேஸ் தட்டுப்பாட்டால் ஒரு நாளில் பாதியளவு நேரம் வரிசையிலேயே கழிந்துவிடுகிறது. மீதமுள்ள நேரத்தில் கிடைக்கும் வருமானம், ஆட்டோ வாடகை மற்றும் அன்றாடத் தேவைகளுக்கே போதுமானதாக இல்லை. இது தவிர, தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி சில இடங்களில் எல்.பி.ஜி விலை சட்டவிரோதமாக உயர்த்திக் கேட்கின்றனர். ரூ.54 கேஸ் விலை இருந்த நிலையில் தட்டுப்பாடு காரணமாக ஒவ்வொரு பங்குகளில் வெவ்வேறு விலை வாங்கப்படுகிறது.

எங்களுக்கு ஆட்டோ ஓட்டினால் தான் வாழ்வாதாரம் அதனால் அந்த விலை கொடுத்து கேஸ் நிரப்பிக்கொள்கிறோம். தேர்தல் அறிவித்த பின் ஓரளவிற்கு எல்.பி.ஜி ஒன்றிய அரசு தமிழகத்திற்கு அனுப்பி கொண்டிருந்தது. ஆனால் இப்போது தேர்தல் முடிந்த நிலையில் கேஸ் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு அனுப்புமா என கேள்வி குறியாக உள்ளது. இருப்பு வைக்கப்பட்டிருந்த பங்குகளில் கூட இப்போது கேஸ் இல்லாமல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாக சரி செய்ய அரசுகள் முனைப்பு காட்ட வேண்டும்.இவ்வாறு கூறினர்.

இந்த கேஸ் தட்டுப்பாடு காரணமாக ஆட்டோக்கள் தட்டுப்பாடின்றி ஓடாததால், அலுவலகம் செல்பவர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் சில ஆட்டோக்களிலும் தட்டுப்பாட்டை காரணம் காட்டி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாகப் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

# செஞ்சியில் தி.மு.க. நிர்வாகிகளுக்கு நன்றி !

## செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

செஞ்சி, ஏப் 27- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டார்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

செஞ்சி சக்கராபுரம் குளக்கரை அருகில் நன்றி தெரிவித்த தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., விற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகளுக்கு சால்வை அணைத்து தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், நகர அவை தலைவர் பார்சு துரை, பேரூராட்சி மன்ற கவுன்சிலர் எம்.பி. ஆர். மோகன், அரசு வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணன், ஜி.சரவணன், ஜி.டி.தனசேகரன், மொபின், அல்லாபகஷ், மணி, அன்பு, வேலு, வழக்கறிஞர் சந்துரு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தேர்தலுக்காக சொந்த ஊர்களுக்குச் சென்றவர்கள் மீண்டும்

# சென்னை, மற்ற ஊர்களுக்குத் திரும்ப வசதியாக 14,508 சிறப்பு பஸ்கள் இயக்கம்!

சென்னை, ஏப்.27- தேர்தலுக்காக சொந்த ஊர்களுக்கு சென்ற மக்கள் மீண்டும் சென்னை மற்றும் இதர ஊர்களுக்கு திரும்புவதற்கு வசதியாக 14 ஆயிரத்து 508 பஸ்கள் இயக்கப்பட உள்ளது.தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடந்தது. இதை முன்னிட்டு, பொதுமக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு சிரமமின்றி பயணம் செய்து வாக்கு செலுத்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. பொதுமக்களின் வசதிக்காக சென்னையில் இருந்து தினசரி இயக்கக்கூடிய 2,092 பஸ்களுடன் சேர்த்து 10,663 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. குறிப்பாக, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், கோயம்பேடு, மாதவரம் போன்ற போக்குவரத்து வழித்தடங்களில் இருந்து இந்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 2 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டனர்.

இந்நிலையில் சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் மீண்டும் திரும்பு வதற்கு ஏதுவாக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. தினசரி இயக்கக்கூடிய பஸ்களுடன், கூடுதல் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, இன்று மற்றும் நாளை என இரு தினங்களுக்கும் பொதுமக்கள் சிரமமின்றி சென்னைக்கும் மற்ற ஊர்களுக்கும் பயணம் செய்திட ஏதுவாக பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இன்று சென்னைக்கு தினசரி இயங்கக்கூடிய 2 ஆயிரத்து 92 பஸ்களுடன் கூடுதலாக 1,295 பஸ்களும், முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 2,500 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன. இதேபோல், நாளை சென்னைக்கு தினசரி இயக்கக்கூடிய 2,092 பஸ்களுடன்3,184 சிறப்பு பஸ்களும், பிற ஊர்களுக்கு 3,345 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

மொத்தமாக 14 ஆயிரத்து 508 பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இன்று 19 ஆயிரத்து 676 பயணிகளும், நாளை 47,001 பயணிகளும் பயணத்திற்கான முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள், கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்தை www.tnstc.in அல்லது செல்போன் செயலி மூலம் முன்பதிவு செய்து பயணிக்கவும் அரசு சார்பில் கேட்டுக் கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி, சிறப்பு பஸ் இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பஸ் நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

## மகளிர் நலத் திட்டங்களின் எதிரொலி! தேர்தலில்

# ஆண்களை விட 17 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் வாக்களிப்பு!

சென்னை, ஏப். 27- மகளிர் நலத்திட்டங்களின் எதிரொலியாக, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ஆண்களை விட 17 லட்சத்திற்கும் அதிகமாக பெண்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 23ஆம் தேதி ஒரே கட்டமாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. 234 தொகுதிகளில் 4 கோடியே 85 லட்சம் பேர் வாக்களித்தனர். மொத்தமுள்ள 2 கோடியே 80 லட்சம் ஆண் வாக்காளர்களில், 2 கோடியே 34 லட்சம் பேர் ஜனநாயகக் கடமையாற்றினர். அதேபோல், 2 கோடியே 93 லட்சம் பெண் வாக்காளர்களில் 2 கோடியே 51 லட்சம் பேர் ஜனநாயகத் திருவிழாவில் பங்கேற்றனர். அதாவது, ஆண்களை விட 17 லட்சத்திற்கும் அதிகமாக பெண்கள் தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட மகளிர் நலத்திட்டங்கள், வாக்களிப்பதன் அவசியம் குறித்த கூடுதல் விழிப்புணர்வு உள்ளிட்ட காரணங்களால் கிராமப்புறங்களில் அதிக அளவிலான பெண்கள் சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்துள்ளனர். ராமநாதபுரம், திருப்பூர், திருவாரூர், சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் ஆண்களை விட பெண்களே அதிக அளவில் வாக்களித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண் வாக்காளர்களுடன் ஒப்பிடுகையில் 70 ஆயிரம் பெண்களின் வாக்குகள் அதிகமாக பதிவாகியுள்ளன. தமிழ்நாடு முழுவதும் ஆண்களின் வாக்குப்பதிவு 83.57 சதவீத மாகவும், பெண்களின் வாக்குப்பதிவு 85.76 சதவீதமாகவும் பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் உத்தரவால்

# ரயில்வே துறையில் பல்லாயிரம் பேர் வேலை இழக்கும் அபாயம்!

## தொழிற் சங்கங்கள் கண்டனம்!

புதுடெல்லி, ஏப். 27- ரயில்வே துறையில் 2 சதவீத பணியாளர்களை குறைக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் காரணமாக பல்லாயிரம் பேர் வேலை இழப்பார்கள் என்று தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனமான ரயில்வே துறையில் மொத்தம் 14 லட்சத்து 80 ஆயிரத்து 455 பணியாளர்கள் உள்ளனர். அதிக வருமானம் மற்றும் அதிக ஊழியர்களைக் கொண்ட துறையாக ரயில்வே துறை உள்ளது.

இந்நிலையில், இந்திய ரயில்வே நிர்வாகம் தனது ஒட்டுமொத்த பணியாளர் எண்ணிக்கையில் 2 சதவீதத்தைக் குறைக்க உத்தரவிட்டுள்ளது. அதாவது சுமார் 30 ஆயிரம் பணியாளர்களைக் குறைக்க ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது.

தெற்கு ரயில்வேயில் மட்டும் ஆயிரத்து 906 பணியிடங்கள் குறைக்கப்படவுள்ளன. ஒருபுறம் அதிவேக ரயில்கள், புதிய வழித்தடங்கள் மற்றும் வந்தே பாரத் போன்ற நவீன ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், மறுபுறம் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது முரணாக இருப்பதாக தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆட்குறைப்பு நடவடிக்கையானது நிர்வாகச் செலவுகளைக் குறைக்கும் நோக்கில் எடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டாலும், இது ரயில்வே துறையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் ரயில்வே ஊழியர்கள் சங்கத்தினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். போதிய பணியாளர்கள் இல்லாத சூழலில், தற்போதுள்ள ஊழியர்களுக்குப் பணிச்சுமை அதிகரிப்பதோடு, ரயில்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் தொய்வு ஏற்படக்கூடும் என்றும், இது பயணிகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

## பொருளாதார நெருக்கடியில் சிக்கிய

# உக்ரைனுக்கு ரூ.10 லட்சம் கோடி நிதி உதவி!

## ஐரோப்பிய யூனியன் ஒப்புதல்!

கீவ், ஏப்.27- ரஷிய போரினால் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி வரும் உக்ரைனுக்கு ரூ.8 லட்சம் கோடி நிதி வழங்க ஐரோப்பிய யூனியன் ஒப்புதல் அளித்துள்ளது.

### கஜானாவைக் காலி செய்த உக்ரைன்

ரஷியாவுடன் கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக கடும் போர் புரிந்து வரும் உக்ரைன் நாடு, முன்னெப்போதும் இல்லாத வகையில் கடுமையான நிதிய நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. போருக்காகத் தன் கஜானாவைக் காலி செய்துள்ள உக்ரைனுக்கு, புதிய உயிர் கொடுக்கும் வகையில் ரூ.10 லட்சம் கோடி (90 பில்லியன் யூரோ) நிதியுதவி வழங்க ஐரோப்பிய யூனியன் அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதியுதவிக்கு முட்டுக்கட்டை போட்டு வந்த ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பன், சமீபத்திய தேர்தலில் தோல்வியைத் தழுவினார். இதையடுத்து அங்கு அமைந்த புதிய அரசு, இந்த திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததால், பல மாதங்களாக முடங்கிக் கிடந்த நிதி சிக்கல் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

ராணுவ பலத்தை அதிகரிக்க இந்த பிரம்மாண்ட நிதி 2 தவணைகளாக வழங்கப்பட உள்ளது. இதில் சரிபாதி தொகை இந்த ஆண்டே உக்ரைனுக்குக் கிடைக்கும். குறிப்பாக, ராணுவ பலத்தை அதிகரிக்கவும், ரூ.3% லட்சம் கோடி (34) பில்லியன் யூரோ) அளவிலான தொகை மருந்து வம், கல்வி போன்ற அத்தியாவசிய பொதுச் சேவைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையை உக்ரைன் இப்போதைக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்பதும், ரஷியா போர் இழப்பீடு வழங்கினால் மட்டுமே இந்தக்கடனை உக்ரைன் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜெலென்ஸ்கி உருக்கம்

இந்த நிதியுதவி குறித்து உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி கூறுகையில் "இந்த நிதி எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய நிம்மதி. இருப்பினும், இது முழுமையானது அல்ல. எங்களின் ஆயுத இந்த நிதியால் பயன்படுத்த முடியும். மின்சாரக் கட்டமைப்பைச் சீரமைக்க இன்னும் கூடுதல் நிதி தத் தொழிற்சாலைகளின் முழுத் திறனில் 60 சதவீதத்தை மட்டுமே தேவைப்படுகிறது," என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்துக்குள் இந்த நிதி கிடைக்கா விட்டால் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கக் கூட முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். தற்போது இந்த நிதி உக்ரைனுக்குப் புதிய நம்பிக்கையை அளித்துள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

# உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழப்பு!

## உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசு தகவல்!

புதுடெல்லி, ஏப். 27- உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழந்துள்ளதாகவும் பலர் விருப்பப்பட்டு சென்றதாகவும் உச்ச நீதி மன்றத்தில் ஒன்றிய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் வசிக்கும் திவ்யா தாக்கல் செய்த பொது நல மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

26 இந்தியர்கள் சுற்றுலா பயணிகளாகவும், படிக்கவும் ரஷ்யாவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபரில் சென்றனர்.

வேலைவாய்ப்பு வழங்குவதாக அழைக்கப்பட்ட அவர்களின் பாஸ்போர்ட், அடையாள ஆவணங்கள் பறிக்கப்பட்டு, மிரட்டி உக்ரைனுடனான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களைக் கண்டறிந்து தாயகம் அனுப்பி வைக்கும் நடவடிக்கையை எடுக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த பொதுநல மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு நேற்று முன் தினம் விசாரித்தது.

அப்போது ஒன்றிய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி தாக்கல் செய்த மனுவில்; "26 நபர்களில் 10 பேர் உக்ரைன் உடனான போரில் உயிரிழந்து இருப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பங்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பில் இருப்பதாகவும், உக்ரைன் உடனான போரில் பலர் விருப்பப்பட்டு சென்றிருப்பதாகவும், சில ஏஜெண்டுகள் தவறாக வழி நடத்தி இருக்க கூடிய சம்பவங்களும் இருப்பதாகவும், ரஷ்யாவுக்கு 215 இந்தியர்கள் சென்றிருப்பதாகவும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிலை அறிக்கை தாக்கல் செய்ய வெளியுறவு அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை உச்ச நீதிமன்றம் தள்ளிவைத்துள்ளது.